மட்/ ககு/ பேத்தாழை விபுலானந்தா கல்லூரி
பல்தேர்வு வினாக்களின் தொகுப்புக்கள்
க.பொ.த. (உயர்தரம்) - 2020

அத்தியாயம் பத்து (கருதுகோள்கள்)

எல்லா வினாக்களுக்கும் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

01. விஞ்ஞான முறையில் சந்தர்ப்பநிலை கருதுகோளின் பயன்பாட்டினைப் பரிந்துரைத்தவர்

1. பொப்பர் 2. பிரான்சிஸ் பேக்கன் 3. லக்கட்டோஸ்
4. கூன் 5. பயராபான்ட்

02. கருதுகோள் எளிமையானது என்பதற்கு மிகவும் பொருத்தமான விளக்கமாக அமைவது

1. கோட்பாட்டு ரீதியான எண்ணக்கரு மூலம் உலகத்தினைத் தெளிவுபடுத்தல்
2. அனுபவ ரீதியான சோதனைகளின் மூலம் பொய்ப்பிக்கக் கூடியதான நிலை
3. எமக்கு பரிச்சயமான விடயங்கள் உள்ளிட்டவை கருதுகோளாக உள்ளமை
4. நேரடி புலக்காட்சிக்கு இலகுவில் உட்படுத்திக் கொள்ளக் கூடியமை
5. குறைந்த எண்ணக்கருக்களின் பிரதான துறை சார்ந்த கூடுதலான பண்புகளை வெளிப்படுத்தும் ஆற்றல்

03. சமூகவிஞ்ஞான ரீதியான கருதுகோள் தொடர்பில் பேராசிரியர் ஜே. ரொபின்சனின் கூற்றில் மிகப் பொருத்தமான கூற்றாக அமைவது

1. சமூக விஞ்ஞானக் கருதுகோள் விஞ்ஞான முறைக்கேற்ப பொய்ப்பிக்கக் கூடிய ஆற்றல் உடையது
2. சமூக விஞ்ஞானக் கருதுகோள் உண்மையானது என முடிவு செய்வதற்கு பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையொன்று இல்லை
3. ஒவ்வொரு சமூகப் பின்னணி பொதுவாகத் தரவுகளை தேடிக் கொள்ளக் கூடியதாக இருக்கும்
4. சமூக விஞ்ஞானத் தரவுகள் நிலையானவை
5. சமூக விஞ்ஞானத் தரவுகளை மீண்டும் மீண்டும் சோதனைக்குட்படுத்திக் கொள்ளும் ஆற்றலுடையவை

04. கருதுகோளொன்றினை பொய்ப்பிக்கக்கூடிய சந்தர்ப்பம் சாத்தியமற்றதொன்று என்பதனால் கருதப்படுவது

1. விஞ்ஞான சோதனைகளினால் கருதுகோள் பொய்யானதாகவில்லை
2. புதிய எதிர்வு கூறலை வெளிப்படுத்துகின்ற நிலை
3. பொய்ப்பிக்கப்பட்டதும் விஞ்ஞானக் கருதுகோள் எனும் நிலையினை இழக்கின்ற நிலை
4. நிகழ்தகவு குறைந்த கருதுகோள் பொய்யானதாகுவதற்கு அதிக சந்தர்ப்பங்கள் உள்ள நிலை
5. நிகழ்தகவு கூடியதான கருதுகோள் பொய்யாவதற்கு மிகவும் இலகுவான இடமுண்டு எனும் நிலை

05. கருதுகோளின் பண்புகள் எதிர்வுகூறக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதன் பொருள்

1. குறைந்தளவான எண்ணக்கருக்களுடன் கருதுகோள் அமைதல் வேண்டும்
2. அவதான சோதனை மூலம் சோதித்து அறியக்கூடியதாக இருத்தல் வேண்டும்
3. எதிர்காலத்தில் உறுதிப்படுத்தக்கூடியதாக அமைதல் வேண்டும்
4. எதிர்கால நோக்கம் கருதி கருதுகோளை முன்வைத்தல் வேண்டும்
5. எதிர்காலத்தில் நிகழக்கூடியவற்றை முற்கூட்டியே தீர்மானித்து கொள்ள வேண்டும்

www.ikeo.lk

06. பின்வரும் கூற்றுக்களுள் எது விஞ்ஞானக் கருதுகோளொன்றின் எளிமைத் தன்மையினை மிகப் பொருத்தமாகச் சுட்டிக்காட்டுகின்றது.

1. எளிமையான சொற்களால் கருதுகோள் விபரிக்கப்படல்
2. பரிச்சயமாக அல்லது பொதுத் தன்மையுடன் கூடிய சொற்களால் கருதுகோள் விபரிக்கப்படல்
3. கருதுகோள் இலகுவாக சோதிக்கப்படக் கூடியதாக இருத்தல்
4. குறைந்தளவிலான மாறிலி எண்ணக்கருக்களைக்கொண்டு பரந்த துறைகளை விளக்குதல்
5. கருதுகோள் கணித ரீதியாக இலகுவாக வெளிப்படுத்தப்படல்

07. விஞ்ஞானக் கருதுகோள் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் குறைபாடுடைய கூற்று யாது

1. புலக்காட்சியின் மூலம் சோதிக்கக்கூடிய எதிர்வுகூறலைத் தரும்
2. எளிமையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை
3. பிரச்சனைக்கு தீர்வினைப் பெற்றுத்தரும்
4. பொதுமையாக்கமாக இருத்தல் வேண்டும்
5. இதுவரை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் விதிக்கமைவாக இருக்க வேண்டும்

08. ''அ'' வின் கீழ் தரப்பட்டுள்ள விபரணங்கள் ''ஆ'' வின் கீழ் குறிப்பிடப்படும் முறையியலுடன் சரியாக தொடர்புபடும் ஒழுங்கினைக் குறிப்பிடுக.

அ	ஆ
1. தனிப்பட்ட நேர்வை விபரிக்கின்ற ஓர் அனுபவ பொதுமையாக்கம்	அ. நேர்வுகள்
2. புலக்காட்சிக்குட்படக் கூடிய சந்தேகத்திற்கு இடமற்ற நிகழ்வு	ஆ. கருதுகோள்
3. இயற்கையின் இயல்புகளை புலப்படுத்தும் விதிகள் கொள்கைகள்	இ. தன்மறுப்பு எதிர்வுகூறல்
4. எதிர்வு கூறல் ஒன்று நடைபெறாது விடுதல்	ஈ. விதிகள் ஆகும்
5. விஞ்ஞானப்பிரச்சனைக்கு தீர்வு காணும் முகமாக தற்காலிகமாக முன்வைக்கப்படும் ஓர் ஊகம்	உ. இயற்கை விதி

1. ஈ,அ,உ,இ,ஆ
2. அ,ஆ,உ,இ,ஈ
3. உ,அ,ஆ,ஈ,இ
4. இ,ஈ,உ,அ,ஆ
5. அ,ஆ.ஈ,உ,இ

09. கருதுகோள் தொடர்பாக தவறான கூற்று

1. கருதுகோள்கள் ஊக எண்ணங்கள்
2. கருதுகோளுக்கு முன்பதான அவதானம் உள்ளது
3. ஆய்வின் பின்னரும் கருதுகோள் இடம்பெறும்
4. கருதுகோள் எப்போழுதும் பொய்ப்பித்தலுக்கு இடம் அளிக்கும்
5. கருதுகோள்களே விதி கொள்கைகளாக மாற்றமடையும்

10. விஞ்ஞானக் கருதுகோள் தொடர்பான சரியான கூற்று எது

1. விஞ்ஞானக்கருதுகோள் விதியென்றும் கொள்கையென்றும் வேறுபாடு அடைகின்ற தொடர்பிற்கு இட்டுச்செல்லும்
2. எந்தவொரு சோதனைக்கு பின்னும் ஒரு கருதுகோள் இருக்கும்
3. விஞ்ஞானச் சோதனைகளில் இருந்தே கருதுகோள் பிறக்கின்றன.
4. விதிகளைப் போன்று இயற்கை ஒழுங்கமைப்புக்கு முரணாகக் காட்டுகின்ற பொதுமையாக்கங்களாக இருத்தல் வேண்டும்
5. ஒரு பரிசோதனையின் உறுதிப்படுத்தப்படாத முடிவாகும்

11. கருதுகோள்களின் படிமுறைகளை விளக்கி நிற்பது.

1. பரிசோதனையின் முடிவுகள்
2. அவதான தரவுகள்
3. விஞ்ஞான முறைமைகள்
4. அனுபவச் சோதனைகள்
5. விஞ்ஞானிகளின் அறிவாற்றல்

www.kdu.lk

12. கருதுகோளொன்றிலிருந்து எதிர்வுகூறல் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு கருதுகோளுடன் அவசியம் பயன்படுத்திக் கொள்ள வேண்டியதாயிருப்பது

1. முதன்மை அம்சங்கள் 2. உப கருதுகோள்கள் 3. கணிதப் பகுப்பாய்வு
4. எடுப்பு நுண்கணிதம் 5. பரிசோதனை

13. விஞ்ஞான கருதுகோளொன்று

1. அவசியம் உண்மையானதாக இருக்க வேண்டும்
2. சமகால விஞ்ஞான நோக்குடன் முரண்படுதல் கூடாது
3. அனுபவ ரீதியாக சோதிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்
4. கோட்பாட்டு ரீதியானதாக இருக்க வேண்டும்
5. முன்னணி நிலையிலுள்ள விஞ்ஞானியினால் முன்வைக்கப்படல் வேண்டும்

www.lkedu.lk